[1981 மார்ச் 6

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே தமிழ்ப் புலவர்களை நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மிக்க நன்றி. அப்படி உத்தேசிக்கின்ற பொழுது, நடுநிலைப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய, புலவர்களை அனுமதிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

படைவீடு பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சி

ரவினா எண். 403—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டம் படைவீடு என்னும் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரால் ஆராய்ச்சி ஏதும் செய்யப்பட்டதா ?

(ஆ) இப்பகுதியில் புராதீன பொருள்கள் பொற்காசு மற்றவைகளும் கிடைப்பது அரசு கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் படைவீடு என்னும் பகுதி, புராதனமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் என்று கருதி, இனி மேலாகிலும் அங்கு ஆய்வு செய்ய, புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அனுப்பப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் தரப்படுமானால், தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கு அனுப்பப்பட்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.